கனமழை: விரைவான மின்னல் வேக நிவாரண நடவடிக்கைகள்!

முதல்வர் மு.க.ஸ்டாலின் அரசுக்கு பொதுமக்கள் - நாளேடுகள் மனம் திறந்து பாராட்டு!

ஒரு புதிய அனுபவம்
தினகரன்
Dinakaran
www.dinakaran.com /dinakarannews



சென்னையில் கொட்டித் தீர்த்த கனமழை

மின்னல் வேகத்தில் பணியாற்றிய ஊழியர்கள், அதிகாரிகளுக்கு மக்கள் பாராட்டு

95 சதவீதம் மழைநீரை அகற்றும் பணி நிறைவு

சென்னை, அக்.17: சென்னையை புரட்டி போட்ட கனமழையால், தேங்கியுள்ள மழைநீரை அகற்றும் பணியில் சென்னை மாநகராட்சி, தீயணைப்பு துறை, மின்வாரியம் உள்ளிட்ட அனைத்து துறை அதிகாரிகளும் மின்னல் வேகத்தில் செயல்பட்டதன் பலனாக 95 சதவீத மழைநீர் அகற்றும் பணிகள் நிறைவடைந்துள்ளது. தங்கள் நலனை பொருட்படுத்தாமல் முழுவீச்சில் பணியில் ஈடுபட்ட அதிகாரிகள், ஊழியர்கள் அனைவருக்கும் பொதுமக்கள் பாராட்டு தெரிவித்து வருகின்றனர். ஏரிக்குள் கட்டியுள்ள பகுதிகளில் மட்டுமே தண்ணீர் தேங்கியிருப்பது தெரியவந்துள்ளது.

சென்னையிலும் அதன் சுற்றுப்புறங்களிலும் கடந்த திங்கட்கிழமை பெய்ய ஆரம்பித்த கனமழை தொடர்ந்து பெய்தது. இதனால் பல இடங்களில் மழைநீர் தேங்கின. மழைநீரை வெளியேற்றும் பணியில் மாநகராட்சி ஊழியர்கள் தீவிரமாக ஈடுபட்டு வருகின்றனர். சென்னை மாநகராட்சி உட்பட அனைத்து துறை ஊழியர்களும் முழுவீச்சில் மழைநீரை அகற்றும் பணியில் இறங்கினர். இதனால் சென்னையில் மழைநீர் தேங்கிய பெரும்பாலான இடங்களில் மழைநீர் வடிந்தது.

குறிப்பாக, சென்னை மாநகராட்சி ஊழியர்கள் அனைவரும் தங்கள் வீடுகளுக்கு செல்லாமல் இரவு, பகல் பாராமல் தொடர்ந்து பணியாற்றினர். அவர்களுக்கு தேவையான உணவு உள்ளிட்ட வசதிகளை அதிகாரிகள் செய்து கொடுத்தனர். கொஞ்சம் கூட ஓய்வில்லாமல் களப்பணியில் தீவிரமாக ஈடுபட்டதன் பலனாக நேற்றிரவே முக்கிய சாலைகளில் மழைநீர் அகற்றப்பட்டது. மேலும் தாழ்வான பகுதிகளில் மழைநீர் தேங்கிய இடங்களில் எல்லாம் மோட்டார் பம்புகள் மூலம் மழைநீரை அகற்றும் பணியும் துரிதமாக நடைபெற்றது. இதனால் கிட்டத்தட்ட சென்னையில் பெரும்பாலான இடங்களில் நேற்று முன்தினம் நள்ளிரவுக்குள் மழைநீர் அகற்றப்பட்டது. இந்நிலையில், நேற்று காலை முதல் மழையின் தாக்கம் குறைந்தது. இதை தொடர்ந்து தேங்கிய மழைநீரை அகற்றும் பணியில் சென்னை மாநகராட்சி, தீயணைப்புதுறை, மின்வாரியத் துறை என அனைத்து துறை அதிகாரிகள், ஊழியர்கள் என அனைவரும் மின்னல் வேகத்தில் செயல்பட்டு வருகின்றனர். இதன் பலனாக நேற்று காலைக்குள் கிட்டதட்ட 95 சதவீத மழைநீர் அகற்றும் பணி நிறைவடைந்தது.

இன்னும் 5 சதவீத பணிகள் மட்டுமே எஞ்சியுள்ளது. அதுவும் பள்ளிக்கரணை, அடையாறு, கூவம் ஆறு உள்ளிட்ட நீர்நிலைகளை ஒட்டியுள்ள பகுதிகளில் மட்டுமே இன்னும் தேங்கியுள்ள மழைநீரை அகற்ற வேண்டியுள்ளது. இப்பகுதி மக்களை பாதுகாப்பாக நிவாரண முகாம்களில் தங்க வைக்கப்பட்டுள்ளனர்.

மழைநீர் வடிந்து இயல்பு வாழ்க்கைக்கு சென்னை மக்கள் திரும்பினர். சென்னை மாநகராட்சியில் மழைநீர் தேங்கிய 542 இடங்களில் 501 இடங்களில் முழுமையாக தண்ணீர் வடிந்தது. மீதமுள்ள இடங்களில் தேங்கியுள்ள தண்ணீரை வெளியேற்றும் பணி தீவிரமாக நடைபெற்றது. நேற்று இரவுக்குள் அந்த பணிகளும் முடிவடையும் என்று சென்னை மாநகராட்சி அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

மழைநீர் அகற்றும் பணியில் மின்னல் வேகத்தில் இரவு பகல் பாராமல் ஈடுபட்ட சென்னை மாநகராட்சி, தீயணைப்புதுறை, மின்வாரியம் உள்ளிட்ட அனைத்து துறை அதிகாரிகள், ஊழியர்களுக்கு பொதுமக்கள் பாராட்டு தெரிவித்து வருவது குறிப்பிடத்தக்கது. துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின், மழை தொடங்கியதில் இருந்து தற்போது வரை மீட்பு பணிகளை முடுக்கிவிட்டார். மழைநீர் தேங்கிய இடங்களுக்கு எல்லாம் நேரடியாக சென்று மீட்பு பணிகளை பம்பரம் போன்று அவர் சுழன்று பணியாற்றியது பொதுமக்கள் மத்தியில் பாராட்டை பெற்றுத் தந்துள்ளது.

முதல்வர் மு.க.ஸ்டாலின் மற்றும் அமைச்சர்கள், எம்எல்ஏக்கள், கவுன்சிலர்கள் மட்டுமல்லாது மாநகராட்சி ஆணையர் குமரகுருபரன், போலீஸ் கமிஷனர் அருண், தீயணைப்புத்துறை இயக்குநர் ஆபாஷ்குமார், இணை இயக்குநர் சத்தியநாராயணன் மற்றும் அதிகாரிகள் கொட்டும் மழையில் பணிகளை தீவிரப்படுத்தினர்.

12 லட்சம் பேருக்கு உணவு

சென்னை மாநகராட்சிக்கு உட்பட்ட பகுதிகளில் வெளுத்து வாங்கிய மழையால், கடந்த 2 நாட்களில் மட்டும் 77 மரங்கள் விழுந்தது. இந்த மரங்கள் தற்போது முழுமையாக அகற்றப்பட்டுள்ளன. மொத்தம் 300 நிவாரண முகாம்களில், 27 இடங்களில் 944 பேர் தங்கியுள்ளனர். சென்னை முழுவதும் நடைபெற்று வரும் 100 மருத்துவ முகாம்களில் 5,657 பேர் பயனடைந்துள்ளனர். கடந்த 2 நாட்களில் கனமழையால் பாதிக்கப்பட்ட இடங்களில் 12 லட்சம் பேருக்கு உணவு வழங்கப்பட்டுள்ளது.

மாநிலம் முழுவதும் 1,293 மருத்துவ முகாம்கள் நடத்தப்பட்டு, 77,877 நோயாளிகள் பரிசோதிக்கப்பட்டுள்ளனர். மழைநீர் தேங்கிய 542 இடங்களில் 501 இடங்களில் முழுமையாக தண்ணீர் வடிந்தது. மீதமுள்ள இடங்களில் தேங்கியுள்ள தண்ணீரை வெளியேற்றும் பணி தீவிரமாக நடைபெற்று வருகிறது.

- பம்பரம் போல் சுழன்றி பணியாற்றிய துணை முதல்வருக்கு பாராட்டு
- மழையால் பாதிக்கப்பட்ட 12 லட்சம் பேருக்கு உணவு
- 100 இடங்களில் மருத்துவ முகாம்கள்



மாநகராட்சி, போலீஸ், தீயணைப்பு படை

3 துறைகள் அசுர வேகத்தில் வெள்ள நீரை வெளியேற்றி சாதனை

சென்னை, அக்.17: சென்னையில் கனமழையால் ஏற்பட்ட வெள்ள பெருக்கை சென்னை மாநகராட்சி, பெருநகர காவல் துறை, தீயணைப்பு துறை ஆகிய 3 துறை அதிகாரிகள் இரவு பகலாக மீட்பு உபகரணங்கள் மூலம் பணியாற்றி வெள்ள நீரை வெளியேற்றி சாதனை படைத்துள்ளனர்.

மழை, வெள்ள முன்னேற்பாடு பணிகளுக்கு,முதல்வர் மு.க.ஸ்டாலின் நேரடி பார்வையில் துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் தலைமையில் மூன்று துறைகளான சென்னை பெருநகர மாநகராட்சி, சென்னை பெருநகர காவல்துறை, தீயணைப்பு துறை இணைந்து பல்வேறு சிறப்பு ஏற்பாடுகளை செய்து இருந்தது. மழை நீர் மழைநீர் வடிகால்வாய்களில் வெளியேறும் வகையில் அசுர வேகத்தில் மாநகராட்சி ஊழியர்கள் மற்றும் துப்புரவு பணியாளர்கள் உதவியுடன் தூர்வாரப்பட்டது. பக்கிங்காம் கால்வாயில் உள்ள முகத்தூவாரம் பகுதியில் மழைநீர் வெளியேறும் வகையில் ஜேசிபி இயந்திரம் மூலம் மணல் அகற்றப்பட்டது. பெருநகர முழுவதும் நீர்வழி பாதையில் உள்ள அடைப்புகள் சரிசெய்யப்பட்டது.

சென்னை மாநகராட்சி ஆணையர் குமரகுருபரன் தலைமையில் 15 மண்டலங்கள் வாரியாக வெள்ள பாதிப்பை சரிசெய்ய ஐஏஎஸ் அதிகாரிகள் நியமிக்கப்பட்டனர். பெருநகர காவல்துறை கமிஷனர் அருண் தலைமையில் 22 ஆயிரம் போலீசார் மற்றும் தீயணைப்பு துறை சார்பில் 1000 தீயணைப்பு வீரர்கள் மீட்பு பணிகளில் ஈடுபடுத்தப்பட்டனர். கடந்த 14 மற்றும் 15 ஆகிய தேதிகளில் கொட்டி தீர்த்த வரலாறு காணாத கனமழையால் சென்னை மற்றும் புறநகர் பகுதிகளில் வெள்ள நீர் பெருக்கெடுத்து ஓடியது. மழை வெள்ளம் பாதிப்பு குறித்து பொதுமக்களிடம் சென்னை மாநகராட்சி மற்றும் பெருநகர காவல்துறை அமைத்த கட்டுப்பாட்டு அறைக்கு 24 மணி நேரமும் புகார்கள் பெறப்பட்டது.

மாநகராட்சி ஆணையர் குமரகுருபரன் வெள்ளம் பாதித்த பகுதிகள் மற்றும் பொதுமக்கள் தங்க வைக்க அமைக்கப்பட்ட நிவாரண முகாம்களை பார்வையிட்டு பணிகளை விரைவுபடுத்தினார். தாழ்வான இடங்களை அந்தந்த காவல்நிலையம் இன்ஸ்பெக்டர்கள் மூலம் அடையாளம் கண்டு 35 இடங்களில் சிறப்பு கட்டுப்பாட்டு அறை அமைக்கப்பட்டது. 12 துணை கமிஷனர்கள், 4 இணை கமிஷனர்கள் தலைமையில் 16 தனிப்படைகள் அமைக்கப்பட்டிருந்தன.

கவுன்சிலர்களுக்கு அவரவர் பகுதியில் உள்ள நிலைமைகள் தெரியும் என்பதால் கமிஷனர் அருண் உத்தரவுப்படி போலீசார் மீட்பு பணிகளில் சம்பந்தப்பட்ட வார்டு கவுன்சிலர்கள், திமுக பகுதி செயலாளர்கள் மூலம் எளிமையாக மீட்பு பணிகளை செய்தனர். 35 இடங்களில் அமைக்கப்பட்ட கட்டுப்பாட்டு அறைகளுக்கு வரும் அழைப்புகளின் படி, சம்பந்தப்பட்ட மாநகராட்சி கவுன்சிலர்கள், திமுக நிர்வாகிகளுக்கு தகவல் உடனுக்குடன் தெரிவிக்கப்பட்டு அப்பகுதியில் உள்ள போலீசாரின் பேரிடர் மீட்பு குழுவினருடன் இணைந்து வெள்ள பாதித்த பகுதிகளில் சிக்கி தவித்த பொதுமக்களை மீட்டனர்.

வெள்ளம் சூழ்ந்த தாழ்வான பகுதிகளில் போலீசார், தீயணைப்பு வீரர்கள் மற்றும் மாநகராட்சி ஊழியர்கள் இணைந்து ரப்பர் படகுகள் மூலம் வீடுகளில் வெள்ளம் சூழ்ந்த பாதிக்கப்பட்ட மக்களை காப்பாற்றினர். சென்னை சாலையில் கனமழையால் 77 பெரிய மரங்கள் விழுந்து கடும் போக்குவரத்து பாதிக்கப்பட்டது. அவற்றை போலீசார் தீயணைப்பு வீரர்கள் உதவியுடன் மரம் அறுக்கும் இயந்திரம் உதவியுடன் உடனுக்குடன் அகற்றப்பட்டது. மழை விட்ட 4 மணி நேரத்தில் 3 அரசு துறை அதிகாரிகள் பம்பரமாக சுழன்று சென்னையில் தேங்கிய வெள்ள நீரை வெளியேற்றி சாதனை படைத்துள்ளனர். வெள்ள நீர் வடித்த சாலைகளை சரிசெய்ய வெளிமாவட்டங்களில் இருந்து 5 ஆயிரத்திற்கும் மேற்பட்ட துப்புரவு பணியாளர்களை வரவழைத்து அவர்களுக்கு உரிய பாதுகாப்புடன் பணிகளில் ஈடுபடுத்தப்பட்டனர். இதனால் மழைநீர் தேங்கிய சுவடே இல்லாமல் சென்னை நேற்று காட்சி அளித்தது.



சென்னையில் தேங்கிய மழை நீர் இரவோடு இரவாக வெளியேற்றம்

சைலன்டாக மாஸ்காட்டிய நீர்வளத்துறை அதிகாரிகள்

சென்னை, அக்.17: நீர் வழித்தடங்களை தூர்வாரி தயார் நிலையில் வைத்திருந்ததால் சென்னையில் தேங்கிய மழை நீர் இரவோடு இரவாக வெளியேறியுள்ளது.

சென்னையிலும் அதன் சுற்றுப்புறங்களிலும் கடந்த திங்கட்கிழமை பெய்த கனமழை தற்போது வரை பெய்து கொண்டிருக்கிறது. இதனால் பல இடங்களில் மழைநீர் தேங்கியிருப்பதோடு, பல சுரங்கப்பாதைகள் மூடப்பட்டுள்ளன.

இடைவிடாமல் பெய்து வரும் இந்தக் கனமழையின் காரணமாக, சென்னையிலும் அதன் சுற்றுப்புறங்களிலும் இயல்பு வாழ்க்கை கடுமையாகப் பாதிக்கப்பட்டிருக்கிறது. சென்னை, புறநகர் பகுதிகளில் மழை விடிய விடிய வெளுத்து வாங்கியது. குறிப்பிட்ட இடைவெளியில் கன முதல் மிக கனமழையும் பெய்து கொண்டே இருந்தது. இந்த மழையால் சாலைகளில் வெள்ளப் பெருக்கு ஏற்பட்டது. பெரும்பாலான இடங்களில் மழைநீர் தேங்கிய படியே இருந்தது. வெள்ளம் வடிவதற்கு கால அவகாசமே இல்லாமல் தேங்கியபடியே இருந்தது. மழைநீரை வெளியேற்றும் பணியில் நீர்வளத்துறை அதிகாரிகள் தீவிரமாக ஈடுபட்டு வருகின்றனர். நேற்று முன்தினம் வரை பகலிலும் விட்டு விட்டு மழை பெய்து கொண்டிருந்ததால், மழைநீர் அகற்றுவதில் சிக்கல் ஏற்பட்டிருந்தது. ஆனால் நேற்று மாலை முதல் மிதமான மழை பெய்து வந்த நிலையில், நீர்வளத்துறை உட்பட அனைத்து துறை ஊழியர்களும் முழுவீச்சில் மழை நீரை அகற்றும் பணியில் ஈடுபட்டனர். இதனால் சென்னையில் மழைநீர் தேங்கிய பெரும்பாலான இடங்களில் மழைநீர் வடிந்தது.

கிட்டத்தட்ட சென்னையில் பெரும்பாலான இடங்களில் நேற்று முன்தினம் நள்ளிரவுக்குள் மழைநீர் அகற்றப்பட்டது. இதற்கு முக்கிய காரணம் சென்னையில் உள்ள நீர்வழித்தடங்களில் மழைக்கு முன்பே முறையாக தூர்வாரப்பட்டதால் இரவோடு இரவாக தண்ணீர் வடிந்துள்ளது என அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

இது குறித்து வடசென்னை பகுதி மக்கள் கூறியதாவது : 3 மாதங்களுக்கு முன்பு கொசஸ்தலையாறு, பக்கிங்ஹாம் கால்வாய், எண்ணூர் முகத்துவாரப்பகுதியில் தூர்வாரியதால் மட்டுமே வடசென்னை பகுதிகளில் மழைநீர் தேங்கவில்லை. புழல் ஏரி திறக்கும் போது வெளியேறும் தண்ணீர் இந்த வழியாக கடலில் செல்லும். 20 ஆண்டு கோரிக்கை வைக்கப்பட்டிருந்தது. அதன்படி முகத்துவார பகுதியில் தூரவாரப்பட்டு 1000 டன் மண் வெளியேற்றப்பட்டுள்ளது.

கடந்தாண்டு வரை இந்த பகுதிகளில் மழைநீர் தேங்கி குடியிருப்புகளில் சூழ்ந்தது. ரயில்வே மேம்பாலத்தில் இடுப்பு அளவிற்கு தண்ணீர் தேங்கி நிற்கும். ஆனால் 20 செ.மீ. மழை பெய்தும் தூர்வாரப்பட்டால் ஒரு சொட்டு தண்ணீர் கூட தேங்கவில்லை. மேலும் ஆர்.கே.நகர் வரை தூர்வாரப்பட்டால் எவ்வித தடையும் இன்றி செல்லும். இவ்வாறு அவர் கோரிக்கை வைத்துள்ளனர்.



மின்னகம் மூலம் 2600 அழைப்புகள் பெறப்பட்டன

கனமழையிலும் சீரான மின் விநியோகம்

மின்வாரியம் தகவல்

சென்னை, அக்.17: கன மழை பெய்தாலும் சீரான மின் விநியோகம் இருந்ததாகவும், முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளால் விபத்துகள் தவிர்க்கப்பட்டது என்றும் மின் வாரிய அதிகாரிகள் தெரிவித்தனர்.

சென்னையில் அதிகளவு மழைநீர் தேங்கிய இடங்களை ஒரு சில இடங்களை தவிர அனைத்து பகுதிகளிலும் சீரான மின் விநியோகம் வழங்கப்பட்டது. பல்வேறு முன்னெச்சரிக்கை நடவடிக்கை எடுத்தாலும் ஒரு சில இடங்களில் மின் விபத்து ஏற்பட்டது. தியாகராய நகர் மற்றும் நுங்கம்பாக்கத்தில் மின்

மயிலாப்பூர், ராயபுரம், ஆவடி, பள்ளிக்கரணை, பெரும்பாக்கம் பகுதிகளில் ஒரு சில இடங்களில் மின் தடை ஏற்பட்டது. சென்னை நகரில் 20 மின் மாற்றிகள் மட்டுமே மழைநீர் தேக்கம் காரணமாக



பட்டு வடிந்தது வபத்துகள் நிகழ்ந்தன. ஆனாலும் உயிரிழப்பு ஏதுமில்லாமல் பாதுகாப்பு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டன.

இதுகுறித்து மின்வாரிய அதிகாரிகள் கூறியதாவது:

மின் பெட்டியில் உள்ள மின்கம்பி இணைப்புகளில் மழைநீர் புகுந்ததால் விபத்து ஏற்பட்டது. விபத்து குறித்த தகவல் கிடைத்தவுடன் பணியாளர்கள் அதனை சரிசெய்தனர். திருவல்லிக்கேணி,

முன்னெச்சரிக்கையாக நிறுத்தி வைக்கப்பட்டது. அதுவும் மழைநீர் வடிந்ததும் மின்சாரம் வழங்கப்பட்டது.

நேற்று முன்தினம் மின்னகம் சேவை மையத்தில் வழக்கமாக 2400 அழைப்புகள் பெறப்படும் நிலையில், கூடுதலாக 200 அழைப்புகள் பெறப்பட்டன. மேலும் கூடுதலாக 10 பணியாளர்களை பணியில் இணைக்கவும் முடிவு செய்யப்பட்டுள்ளது. இவ்வாறு அவர்கள் கூறினர்.

தினத் தந்தி
DAILY THANTHI
வெல்க தமிழ்



மழைநீர் உடனுக்குடன் வடிந்தது மகிழ்ச்சி அளிக்கிறது

அரசின் துரித நடவடிக்கைகளுக்கு பொதுமக்கள் பாராட்டு

சென்னை, அக்.17- சென்னையில் தேங்கிய மழை நீர் உடனுக்குடன் அகற்றி துரித நடவடிக்கை எடுத்த தமிழக அரசுக்கு மக்கள் பாராட்டு தெரிவித்துள்ளனர். மழை நீர் உடனுக்குடன் வடிந்தது மகிழ்ச்சி அளிப்பதாகவும் கூறினர்.

சென்னையை சூழ்ந்த மழை நீர்

வங்கக்கடலில் நிலைக்கொண்டிருந்த காற்றழுத்த தாழ்வுப் பகுதி காரணமாக சென்னையில் நேற்று முன்தினம் மிக கனமழை பெய்தது. சென்னை மற்றும் புறநகர் பகுதிகளில் கொட்டித்தீர்த்த மிக கனமழையால், சென்னை நகரின் அனேக பகுதிகளை மழை நீர் சூழ்ந்தது. குறிப்பாக வேளச்சேரி பகுதி வெள்ளச்சேரி என்று கூறும் அளவுக்கு, அங்குள்ள பெரும்பாலான பகுதிகளில் மழை நீர் அதிகம் தேங்கியது. அதேபோல நகரின் பல பகுதிகளில் மழை நீர் தேங்கியது.

ஒரே நாள் மழைக்கு சென்னை மக்களின் இயல்பு வாழ்க்கை முழுவதுமாக முடங்கிபோனது.

வேகமாக வடிந்த மழை நீர்

நேற்று முன்தினம் வரை தங்கள் வீட்டின் முன்பாகவும், தெருக்களிலும் மழை நீர் சூழப்பட்டதை பார்த்த கண்களோடு தூங்கிய மக்கள், நேற்று காலை அதே பகுதியை பார்த்து ஆச்சரியம் அடைந்தனர். காரணம், மழை நீர் முழுவதுமாக வடிந்திருந்தது தான். குறிப்பாக வேளச்சேரி ஏ.ஜி.எஸ். காலனி பகுதியில் மழை நீர் முழுவதும் வடிந்து காணப்பட்டது.

அதேபோல நகரின் பல பகுதிகளிலும் மழை நீர் முழுவதும் வடிந்து காணப்பட்டது. மழை நீர் தேங்கிய பகுதிகளில் மாநகராட்சி பணியாளர்கள் உடனுக்குடன் செயல்பட்டு, தண்ணீரை வடிய செய்தனர்.

பொதுமக்கள் பாராட்டு

சென்னையில் நேற்று பெய்த கனமழை காரணமாக நகரின் முக்கிய சாலைகளில் போக்குவரத்து நெரிசல் ஏற்பட்டது. நேற்று சாலைகளில் வழக்கம் போல வாகனங்கள் சென்றன. ஒட்டுமொத்தத்தில் ஒரு நாள் மழைக்கு முடங்கிப்போயிருந்த சென்னை நேற்று இயல்பு நிலைக்கு திரும்பியது.

அரசின் இந்த துரித நடவடிக்கைக்கு பொதுமக்கள் பாராட்டு தெரிவித்துள்ளனர்.

இதுகுறித்து மக்கள் தெரிவித்த கருத்துகள் வருமாறு -

உதயநிதி ஸ்டாலினுக்கு நன்றி

பள்ளிக்கரணை காசியம்மாள்: பள்ளிக்கரணை பகுதியில் 20 ஆண்டுகளுக்கும் மேலாக வசித்து வருகிறேன். ஒவ்வொரு முறையும் மழை வந்தாலே போதும் இந்த பகுதி முழுவதும் வெள்ள நீர் சூழ்ந்து விடும். இங்குள்ள மக்கள் ஒவ்வொரு மழைக்காலத்திலும் படும் அவதி சொல்லி மாளாது. ஆனால் இந்த முறை மழைக்காலம் வருவதற்கு முன்பாகவே அரசின் சார்பில் பல நடவடிக்கைகள் எடுத்தார்கள். மழைநீர் வடிகால்கள் செய்து தந்தார்கள். இரண்டு நாட்களுக்கு முன்பாக துணை முதல்-அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் எங்கள் பகுதிக்கு வந்தார். ஏரி நீர் உடைந்து வெளிவராமல் இருக்க தேவையான நடவடிக்கைகளை உடனுக்குடன் செய்து தந்தார். அதன் காரணமாக இன்றைக்கு எந்த பிரச்சினையும் இல்லாமல், மழை நீர் முழுமையாக வடிந்து, மழைபெய்த சுவரை தெரியவில்லை. அந்த வகையில் உதயநிதி ஸ்டாலினை மனதார பாராட்டி வரவேற்கிறேன்.

காசியம்மாள்

மாநகராட்சி பணியாளர்களுக்கு பாராட்டு

அடையாறு ஆட்டோ டிரைவர் பிரேம் ஆனந்த்: எப்போதுமே மழைக்காலத்தில் அடையாறு பெசன்ட்நகர் பகுதிகளில் உள்ள சாலைகளில் மழை நீர் பெருக்கெடுத்து ஓடும். இதனால் எங்கள் வாழ்வாதாரமே கேள்விக்குறியாகும். ஒருநாள் மழைக்கு சென்னை நகர வீதிகள் மழைநீரால் சூழப்பட்டதை பார்த்து பயந்து போனேன். ஆனால் இன்றைக்கு காலையில், இந்த பகுதி முழுவதும் மழைபெய்த சுவடு தெரியாமல் இருந்ததை பார்த்து ஆச்சரியம் அடைந்தேன். வெள்ள நீரை உடனுக்குடன் அகற்றும் பணிகள் முழுவீச்சில் நடந்ததை பார்த்தேன். அரசின் நடவடிக்கைகளை பாராட்டும் அதே வேளை, மாநகராட்சி பணியாளர்களை நிச்சயம் பாராட்டித்தான் ஆகவேண்டும். சென்னையை வெள்ளத்தில் இருந்து பாதுகாத்த மிகப்பெரிய கடமைக்குரியவர்கள் மாநகராட்சி பணியாளர்கள் தான்.

பிரேம் ஆனந்த்

மகிழ்ச்சியாக இருக்கிறது

கொளத்தூர் பெரியார் தெரு லட்சுமி: எங்கள் பகுதி முழுவதும் அதிகளவு மழை நீர் தேங்கி இருந்தது. ஆனால் நேற்று காலை வீட்டில் இருந்து வெளியே வந்து பார்த்தபோது கொஞ்சம் கூட தண்ணீர் இல்லை மிகவும் மகிழ்ச்சியாக உள்ளது. கடந்த வெள்ளத்தின் போது தண்ணீர் தேங்கி பாதிக்கப்பட்டோம். ஆனால் இந்த முறை எந்த பாதிப்பும் இல்லை. மாநகராட்சி பணியாளர்கள் உடனுக்குடன் பணியாற்றி மழை நீரை அப்புறப்படுத்தி விட்டனர். எங்களுக்கு தேவையான உணவுகள் நாங்கள் கேட்காமலே மாநகராட்சி சார்பில் வீடு தேடி வந்தது. கடந்த முறை நீர்தேங்கிய பகுதிகளில் இந்த முறை தண்ணீர் தேங்காமல் இருக்க முழு நடவடிக்கை எடுத்த தமிழக அரசுக்கும், முதல்-அமைச்சர் மு.க.ஸ்டாலினுக்கும் நன்றி தெரிவித்துக் கொள்கிறோம்.

லட்சுமி

சொன்னதை செய்து விட்டார்கள்

வில்லிவாக்கம் செய்யது அலி பாத்திமா: கடந்த முறை வெள்ளத்தின் போது இடுப்பளவிற்கு தண்ணீர் தேங்கி நின்றது. எனவே இந்த முறை மிககனமழைபெய்யும் என்று அறிவிக்கப்பட்டதால் கலக்கத்தில் இருந்து வந்தோம். இரவு முழுவதும் மழை பெய்ததால் பயத்துடன் தான் உறங்கச் சென்றோம். ஆனால் காலை எழுந்து பார்த்தபோது, மழைநீர் முழுமையாக வடிந்து காணப்பட்டது. இந்த முறை மழை நீர் பாதிக்கப்படும் இடங்களில் தண்ணீர் தேங்காமல் பார்த்துக் கொள்வோம் என்று மாநகராட்சி சார்பிலும், தமிழக அரசும் உறுதியுடன் தெரிவித்திருந்தது. அந்த உறுதியை தற்போது காப்பாற்றி இருக்கிறார்கள். மக்கள் பாதிக்கா வண்ணம் அனைத்து நடவடிக்கையும் மேற்கொண்ட தமிழக அரசுக்கு எங்களது நன்றிகளையும், பாராட்டுகளையும் தெரிவித்துக் கொள்கிறோம். விடிய விடிய உழைத்த மாநகராட்சி பணியாளர்களுக்கு எத்தனை நன்றி சொன்னாலும் தகும். உண்மையிலேயே சொன்னதை செய்து விட்டார் முதல்-அமைச்சர் மு.க.ஸ்டாலின்.

செய்யது அலி பாத்திமா

மழைநீர் தேங்கவில்லை

மேற்கு மாம்பலம் பூவியாபாரி சக்தி: சிறிய மழைபெய்தாலே மேற்கு மாம்பலம் கோவிந்தன் சாலையில் தண்ணீர் தெப்பம் போல தேங்கி நிற்கும். இது பல ஆண்டுகளாக இந்த நிலை இருந்து வந்தது. நேற்று முன்தினம் பெருமழை தொடங்கிய போது, மழைநீர் கண்டிப்பாக தேங்க போகிறது எப்படி வியாபாரம் நடக்கப்போகிறதோ என்று பயந்து கொண்டிருந்தோம். ஆனால் நாங்கள் நினைத்தது போல எந்த அசம்பாவிதமும் நடக்கவில்லை. சிறிதளவும் மழைநீர் தேங்கவில்லை. எங்கள் வியாபாரமும் பயந்தபடி பாதிக்கவில்லை. ஒவ்வொரு முறையும் வெள்ளநீர் சூழாமல் இருக்க நடவடிக்கை எடுப்பார்கள். ஆனாலும் மழை நீர் சூழ தான் செய்யும். ஆனால் இந்த முறை அரசும் மாநகராட்சியும் சொன்னதை நிறைவேற்றி விட்டார்கள்.

சக்தி

மழைநீர் வடிகால்களில் தடைபட்டிருந்த நீர் உடனடியாக அகற்றம்

சென்னையில் மழை நீரை வடியவைக்கும் பணியில் மாநகராட்சி ஊழியர்கள் நேற்றும் தீவிர களப்பணியில் ஈடுபட்டனர். குறிப்பாக மெட்ரோ ரெயில் நிலையங்கள் அருகே அமைந்துள்ள, மழைநீர் வடிகால்களில் மழை நீர் தடைபட்டிருப்பதை கண்டறிந்தனர். இதையடுத்து மோட்டார்களை பயன்படுத்தி, மழை நீர் வடிகாலில் தேங்கியிருந்த மழை நீரை, பாதாள சாக்கடைகளில் திருப்பி விட்டனர். அந்த மழைநீர் அங்கிருந்து கூவம் ஆற்றில் மாற்றி விடப்பட்டது. மாநகராட்சி ஊழியர்களின் இந்த தொடர் நடவடிக்கையை பொதுமக்கள் பாராட்டி வரவேற்றனர்.



சமூக வலைத்தளத்தில் வந்த வாலிபரின் கோரிக்கையை நிறைவேற்றிய துணை முதல்-அமைச்சர்

சென்னையை அடுத்த அகரம்தென் ஊராட்சி கஸ்பாபுரம் கணேஷ் நகர், கிருஷ்ணா நகர் பகுதியில் வீடுகளை மழைநீர் சூழ்ந்தது. இது தொடர்பாக அதே பகுதியை சேர்ந்த விக்னேஷ் என்ற வாலிபர், எக்ஸ்தளத்தில் வீடியோ பதிவிட்டு துணை முதல்–அமைச்சர் உதயநிதி ஸ்டாலினுக்கு கோரிக்கை விடுத்து அதனை 'டேக்' செய்திருந்தார்.

இதனை பார்த்த துணை முதல்–அமைச்சர் உதயநிதி ஸ்டாலின், இது தொடர்பாக உடனடி நடவடிக்கை எடுக்க செங்கல்பட்டு மாவட்ட கலெக்டர் அருண்ராஜுக்கு உத்தரவிட்டார். அதன்பேரில் அந்த பகுதியில் நேற்று முன்தினம் இரவு முதல் மழைநீரை அகற்றும் பணி நடைபெற்றது.

இந்த பணிகளை துணை முதல்–அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் நேற்று நேரில் கஸ்பாபுரம் பகுதிக்கு வந்து ஆய்வு செய்ததுடன் பாதிக்கப்பட்ட குடும்பத்தினருக்கு உரிய நிவாரணங்களை வழங்க வேண்டும் எனவும் கலெக்டருக்கு உத்தரவிட்டார்.

ஆய்வின்போது அமைச்சர் தா.மோ.அன்பரசன், எஸ்.ஆர்.ராஜா எம்.எல்.ஏ., கலெக்டர் அருண்ராஜ், ஊராட்சி தலைவர் ஜெகதீஸ்வரன் உள்ளிட்டோர் உடன் இருந்தனர்.

தனது கோரிக்கையை ஏற்று உடனடியாக நடவடிக்கை எடுத்த துணை முதல்–அமைச்சர் உதயநிதி ஸ்டாலினுக்கு விக்னேஷ் மற்றும் அவரது குடும்பத்தினர் நன்றி தெரிவித்தனர்.



சென்னையில் தேங்கிய மழைநீரை அகற்றும் பணிகள் 90 சதவீதம் நிறைவு

மாநகராட்சி அதிகாரிகள் தகவல்

சென்னை, அக்.17- சென்னையில் தேங்கிய மழைநீரை அகற்றும் பணிகள் 90 சதவீதம் நிறைவு பெற்றுவிட்டதாக மாநகராட்சி அதிகாரிகள் தெரிவித்தனர்.

அயராத உழைப்பு

சென்னை மற்றும் புறநகர் பகுதிகளில் விடிய விடிய வெளுத்து வாங்கிய மழையால் நேற்று முன்தினம் மக்கள் மிகவும் கலக்கமடைந்தனர். ஒரு நாள் மழைக்கு சென்னை இந்த பாடுபடுகிறதே, மிக கனமழை அறிவிக்கப்பட்டிருக்கும் நிலையில் என்ன பாடுபட போகிறோமோ என்று மக்கள் அதிர்ச்சியில் இருந்தனர்.

கொட்டும் மழைக்கு இடையிலும் மாநகராட்சி பணியாளர்கள், மழை நீரை அப்புறப்படுத்தும் பணியில் முழுமூச்சாக ஈடுபட்டனர். சாலையில் தேங்கிய குப்பைகளையும் அகற்றி வந்தனர். இன்னொரு புறம் தேங்கி இருந்த மழைநீரை மோட்டார் பம்புகள் மூலம் மாநகராட்சி ஊழியர்கள் அப்புறப்படுத்தி கொண்டு இருந்தனர்.

நேற்று முன்தினம் இரவுக்கு மேல் மழையின் தாக்கம் குறைந்ததால், தேங்கி நின்ற மழைநீரை அகற்றும் பணி வேகம் எடுத்தது. இதனால் நேற்று சென்னைவாசிகள் காலை தூங்கி எழுந்து பார்த்த போது மழைநீர் முழுவதுமாக வடிந்திருப்பதை கண்டு மகிழ்ச்சி அடைந்தனர்.

அரசு துரித நடவடிக்கை மேற்கொண்டதன் மூலமாகவும், மாநகராட்சி திட்டங்கள் மூலமாகவும் இது சாத்தியம் என்றாலும் மாநகராட்சி பணியாளர்களின் அயராத உழைப்பும் இதற்கு காரணமாக இருந்தது.

90 சதவீதம் நிறைவு

நேற்று பிற்பகலுக்கு உள்ளாகவே மழைநீர் தேங்கிய 560-க்கும் மேற்பட்ட இடங்களில் 460 இடங்களில் மழைநீர் முழுவதுமாக வடிந்தது? கிட்டத்தட்ட 90 சதவீத இடங்களில் மழை நீரை முழுமையாக மாநகராட்சி பணியாளர்கள் அகற்றிவிட்டதாகவும், மீதமுள்ள பகுதிகளில் மழை நீர் அகற்றும் பணிகளையும் துரிதமாக மேற்கொண்டு வருவதாகவும் அதிகாரிகள் தெரிவித்தனர்.

மழைநீரால் பாதிக்கப்பட்ட பகுதிகளில் பொதுமக்களுக்கு வீடு தேடிச் சென்று உணவுகளையும் மாநகராட்சி ஊழியர்கள் வினியோகம் செய்தனர். இதற்காக மண்டலம் தோறும் உணவு தயாரிக்கும் பணியும் மும்முரமாக நடந்து வந்தது. மழையால் பாதிக்கப்பட்ட 7 லட்சம் பேருக்கு மாநகராட்சி சார்பில் உணவுகள் வினியோகம் செய்யப்பட்டு இருக்கின்றன.

மழைநீர் தேங்கிய இடங்களில் 120 மருத்துவ முகாம்களும் மாநகராட்சி சார்பில் அமைக்கப்பட்டன. மழை வெள்ளம் போன்ற பேரிடர் காலங்களிலும் மக்கள் சேவையை கடமையாக எண்ணி செயல்பட்ட மாநகராட்சி பணியாளர்களின் சேவைகளை பாராட்டும் வகையில் சமூக வலைதளங்களில் மீம்ஸ்கள் பறக்க விடப்பட்டு இருக்கின்றன. தற்போது அவை வைரலாகி வருகின்றன.